# சமஷ்டி மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தின் குடிவரவு பற்றிய தீர்மானத்தை மீளாய்வு செய்தல்

## இப்பிரசுரம் யாருக்குரியது?

இப்பிரசுரம் விசா தொடர்பான தீர்மானமொன்றை ஆஸ்திரேலிய சமஷ்டி மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் (Federal Magistrates Court of Australia) மீளாய்வு செய்ய வேண்டுமென விரும்புபவர்களுக்காகும்.

## எத்தகைய தீர்மானங்களை நீதிமன்றம் மீளாய்வு செய்ய முடியும்?

*குடிவரவுச் சட்டம் 1958 (Migration Act 1958)* இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்களை இந்த நீதிமன்றம் மீளாய்வு செய்ய முடியும். குடிவரவுச் சட்டத்தின் கீழ் தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் பொறுப்பானவர்களில் குடிவரவு மற்றும் பிரசா உரிமை அமைச்சர், அகதி மீளாய்வு மன்றத்தின் (Refugee Review Tribunal) உறுப்பினர்கள் மற்றும் குடிவரவு மீளாய்வு மன்றத்தின் (Migration Review Tribunal) உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குவர்.

சட்ட வரம்பிற்குட்பட்ட ஒரு தவறு ('jurisdictional error') நடந்துள்ளதா என்பதை தீர்மானிக்க மட்டுமே நீதிமன்றம் மீளாய்வு செய்யக் கூடும். அதாவது சட்டத்திற்கு உடன்பாடான விதத்தில்தான் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதா என்பதை நீதிமன்றம் முடிவுசெய்யும்.

## நீதிமன்றம் என்ன செய்ய முடியும்?

உங்கள் மீளாய்வு விண்ணப்பம் வெற்றிகரமாக அமையுமாயின் தீர்மானத்தை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருந்தவர்களிடம் நீதிமன்றம் உங்கள் வழக்கை மீண்டும் கொடுக்கக் கூடும். அமைச்சர் குறித்த தீர்மானத்திற்கிணங்க செயற்படுவதையும் நீதிமன்றம் தடுக்க முடியும்.

## நீதிமன்றம் என்ன செய்ய முடியாது?

உங்கள் விண்ணப்பத்தின் தகுதியையோ, உங்களுக்கு விசா வழங்கப்பட வேண்டுமா இல்லையா என்பது பற்றியோ நீதிமன்றம் மறுபரிசீலனை செய்ய முடியாது.

## நீதிமன்றம் சுயேச்சையானதா?

ஆம், குடிவரவுச் சட்டத்தின் கீழ் தீர்மானம் மேற்கொள்பவர்களிடமிருந்து சுயேச்சையானதாக நீதிமன்றம் விளங்கும்.

## யார் விண்ணப்பிக்கலாம்?

சட்ட வரம்பிற்குட்பட்ட ஒரு தவறு இழைக்கப்பட்டுள்ளதாக நீங்கள் நம்பினாலும், தீர்மானத்தில் உங்களுக்குத் திருப்தி இல்லை என்றிருந்தாலும் நீங்கள் இந்த நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பதாக நீங்கள் சட்ட ஆலோசனை பெற வேண்டும்.

## நீதிமன்ற வழக்கு விசாரணை இரகசியமானதா?

பொதுவாக, நீதிமன்ற வழக்கு விசாரணைகளின் போது பொதுமக்கள் சமூகமளிக்கலாம். உங்கள் வழக்கு ஒரு பாதுகாப்பு விசா தீர்மானம் தொடர்பானதாயின், உங்கள் அடையாளத்தை வெளியிட நீதிமன்றம் அனுமதிக்கப்படமாட்டாது.

## காலவரையறை உள்ளதா?

குடிவரவு பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 35 நாட்களுக்குள் மீளாய்வு விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும். நீதிமன்றத்திற்கு காலவரையறையை நீடிக்க இயலும். காலவரையறை நீடிக்கப்பட வேண்டும் என நீங்கள் கோரினால் அதனை நீங்கள் விண்ணப்பத்தில் கேட்பதோடு அதற்கான காரணத்தையும் விளக்க வேண்டும்.

## எத்தகைய படிவங்கள் எனக்குத் தேவை?

ஒரு தீர்மானம் பற்றிய மீளாய்வுக்கு விண்ணப்பிப்பதற்காக நீங்கள் பூரணப்படுத்த வேண்டியவை:

- ஒரு விண்ணப்பம்
- ஒரு உறுதிமொழிப் பத்திரம் (affidavit)

இவ்வாவணங்களை நீங்கள் **www.fmc.gov.au** விலிருந்து அல்லது உங்களுக்கு அருகிலுள்ள நீதிமன்ற பதிவு வைப்பகத்திலிருந்து (court registry) பெற்றுக் கொள்ளலாம்.

தீர்மானம் மேற்கொண்டவர் எத்தகைய சட்ட வரம்பிற்குட்பட்ட தவறை இழைத்துள்ளார் என நீங்கள் நம்புகிறீர்களோ அதனை உங்கள் விண்ணப்பத்தில் அடையாளப்படுத்த வேண்டும். குறித்த தவறுடன் தொடர்பான சூழ்நிலைகள், பொருத்தமான உண்மைகள் ஆகிய அனைத்தையும் நீங்கள் விளக்க வேண்டும். உங்கள் உறுதிமொழிப் பத்திரத்துடன் மீளாய்வு செய்யப்பட வேண்டிய தீர்மானத்தின் பிரதி ஒன்றையும் அத்தீர்மானமத்திற்கான காரணங்கள் பற்றிய விளக்க ஆவணம் ஏதுமிருப்பின் அதனையும் இணைக்க வேண்டும்.

## படிவங்களை நான் யாரிடம் ஒப்படைக்க வேண்டும்?

அனைத்தையும் பூரணப்படுத்தியதும் உங்கள் விண்ணப்பத்தை அதற்கு ஆதாரமான ஆவணங்களுடன் இந்த நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டும். வழக்குப்பதிவு செய்ததன் பின் உங்கள் விண்ணப்பத்தினதும் ஆதார ஆவணங்களினதும் முத்திரையிடப்பட்ட (sealed) பிரதியொன்றை அமைச்சருக்கும் அனேக சந்தர்ப்பங்களில் தீர்மானத்தை மேற்கொண்ட மன்றத்திற்கும் ஒப்படைக்க வேண்டும். இச்செயல் முறை "ஆவணங்களைச் சார்வு செய்தல்" (service of documents) என அழைக்கப்படும்.

அமைச்சருக்கான ஆவணங்களை குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களத்தின் (Department of Immigration and Citizenship) -- திணைக்களம் -- ஊடாக நீங்கள் அனுப்பலாம். திணைக்களத்தின் அலுவலகம் ஒவ்வொரு தலைநகரத்திலும் உள்ளது. முகவரி பற்றிய விபரங்களை அறிய **www.immi.gov.au** வை நாடவும் அல்லது 131 881 இல் அழைக்கவும்.

## நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது இடம்பெறுவது யாது?

நீதிமன்றம் உங்கள் வழக்கு விசாரணைக்கான திகதியையும் நேரத்தையும் நிர்ணயிக்கும். முதலாவது நீதிமன்றத் திகதியில் நீதிமன்றம் பின்வருவனவற்றிற்கான ஆணைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கும்.

- ஒரு உடனடியான வழக்கு விசாரணை
- இரண்டாவது அல்லது இறுதி வழக்கு விசாரணைக்கான திகதி
- ஒரு இடைநிறுத்தல் அல்லது இடைக்கால (தற்காலிக) உத்தரவுகள்
- திருத்தப்பட்ட அல்லது மேலதிக ஆவணங்களைச் சமர்ப்பித்தல்

ஒரு உடனடியான வழக்கு விசாரணைக்கு அல்லது இறுதி விசாரணைக்கு முன்பதாக இரண்டாவதொரு வழக்கு விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவிடுமாயின், விவாதிக்கத் தகுந்த ஒரு வழக்கை (arguable case) நீங்கள் காட்ட வேண்டும் என நீதிமன்றம் கோரக்கூடும். விவாதிக்கத் தகுந்த ஒரு வழக்கு உங்களிடம் இருப்பதாக உங்களால் காட்ட முடியாவிடில், நீதிமன்றம் ஒரு இறுதி விசாரணை இன்றியே உங்கள் விண்ணப்பத்தைத் நிராகரிக்கக்கூடும்.

ஒவ்வொரு நீதிமன்ற விசாரணையின்போதும் உங்கள் வழக்குடன் தொடர்பான விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு நீதிமன்றம் உங்களுக்கு சந்தர்ப்பமளிக்கும். உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் இருப்பாராயின் அவர் உங்களுக்காகப் பேசுவார். அமைச்சர் சார்பாக பொதுவாக ஒரு வழக்கறிஞர் சமூகமளிப்பார். அவர்கள் நீதிமன்றத்தில் சொல்வனவற்றிற்குப் பதிலளிப்பதற்கு உங்களுக்கு அல்லது உங்கள் வழக்கறிஞருக்கு சந்தர்ப்பமளிக்கப்படும். நீங்கள் சமூகமளிக்காதிருப்பதற்கு நீதிமன்றம் அனுமதித்தாலன்றி, விசாரணை நடைபெறும்போதெல்லாம் நீங்கள் நீதிமன்றத்தில் சமூகமளிக்க வேண்டும்.

பொதுவாக நீதிமன்றம் இறுதி விசாரணையின் முடிவில் அதனது தீர்மானத்தை அறிவிக்கும். அல்லது நீதிமன்றம் அதனது தீர்மானத்தை அறிவிக்கும் திகதி பற்றி உங்களுக்கு அறிவிக்கப்படும்.

## உரைபெயர்ப்பாளர் கிடைப்பாரா?

உரைபெயர்ப்பாளர் தொலைபேசிச் சேவையை 131 450 இல் அழைத்து நீங்கள் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ளலாம். நீதிமன்ற விசாரணையின்போது உங்களுக்கு மொழிபெயர்ப்பதற்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவையாயின் அது பற்றி உங்கள் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

## நான் பணம் ஏதும் செலுத்த வேண்டுமா?

நீங்கள் உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது ஒரு கட்டணமும் இறுதி விசாரணைக்காக மற்றொரு கட்டணமும் செலுத்த வேண்டும். சில விசாரணைகளின்போது கட்டணம் அறவிடப்படுவதில்லை. கட்டணங்கள் பற்றி மேலதிகமாக நீங்கள் அறிய வேண்டுமாயின் நீதிமன்றத்திலுள்ள பதிவு வைப்பக உத்தியோகத்தர்களிடம் பேசவும்.

உங்கள் விண்ணப்பத்தை நீதிமன்றம் நிராகரிக்குமாயின் திணைக்களத்தின் சட்ட சம்பந்தமான செலவுகளை நீங்கள் அனேகமாக செலுத்த வேண்டியிருக்கும். உங்கள் வழக்கை விசாரணை இன்றித் தொடராமல் விட்டுவிட நீங்கள் நினைத்தால், பொதுவாக திணைக்களத்தின் சட்ட சம்பந்தமான செலவுகளின் குறைந்த ஒரு பகுதியையே நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

## எனது வழக்கை நான் திரும்பப் பெறலாமா?

ஆம். உங்கள் இறுதி விசாரணைக்கு 14 இலும் குறைவான நாட்களே இருக்குமாயின் உங்கள் வழக்கைத் தொடராதிருப்பதற்கு நீங்கள் இந்த நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

## எனக்கு சட்ட ஆலோசனை தேவையா?

உங்கள் விண்ணப்பம் தொடர்பாக சட்ட ஆலோசனையைக் கூடிய விரைவில் நீங்கள் பெற வேண்டும். ஒரு சட்ட உதவி அலுவலகத்திலிருந்து அல்லது சமூக சட்ட நிலையத்திலிருந்து சில இலவச சட்ட ஆலோசனைகளை உங்களால் பெறக்கூடியதாயிருக்கும். அல்லது நீங்கள் விரும்பிய ஒரு வழக்கறிஞரைத் தெரிவு செய்து அவரது சேவைக்காக நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும்.

இப்பிரசுரம் பொதுவான தகவல்களை மட்டுமே வழங்குகிறதன்றி சட்ட ஆலோசனையை வழங்கவில்லை. உங்களுக்கு ஒரு சட்டப் பிரச்சினை இருக்குமாயின் என்ன செய்வதென்றோ அல்லது நீதிமன்றத்தில் விண்ணப்பிப்பதற்கு முன்பதாகவோ ஒரு வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ள வேண்டும். சமஷ்டி மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தால் (Federal Magistrates Court) சட்ட ஆலோசனை வழங்க முடியாது.